# கிளை என்றால் .....கிளையல்ல.....வேர்

## தமிழ்நாடு அறிவியல் இயக்க

## கிளை செயல்பாட்டிற்கான வழிகாட்டி

தயாரிப்பு

திரு. கு.செந்தமிழ் செல்வன்,

மாநில செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு அறிவியல் இயக்கம்

# கிளை செயல்பாட்டிற்கான வழிகாட்டி

1. **அறிவியல் இயக்க கிளை என்பது என்ன**?

   தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தமிழ்நாடு முழுவதும் செயல்படும் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ அமைப்பு. மக்கள் அறிவியல் விழிப்புணர்வு பெறவும் மேம்பட்ட வாழ்வினைப் அடையவும் உறுதியுடன் செயலாற்றுகிறது.

   இதில் இணைந்து செயலாற்ற விரும்புபவர்கள் ரூ 30 ஆண்டு சந்தா செலுத்தி உறுப்பினராகலாம். ஒரே பகுதியில் 20 உறுப்பினர்களுக்கு மேல் இணைந்தால் அவர்கள் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் ஒரு கிளையாக இயங்கலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட அமைப்பு செயல்படுகிறது. இந்தக் கிளை அந்த மாவட்டக் குழுவுடன் இணைந்து செயல்படும். மாவட்ட அமைப்புகளும் மாநில அமைப்புடன் இணையப்பட்டவை.

   20 உறுப்பினர்கள் இணந்தது ஒரு கிளை.

   மாவட்டத்திற்குள் செயல்படும் பல கிளைகள் இணைந்தது மாவட்டக்குழு.

   அனைத்து மாவட்டக் குழுக்களும் இணையப்பெற்றது மாநிலக் குழு.

   அறிவியல் இயக்கத்தின் அடிப்படை அமைப்புதான் கிளை.

2. **அறிவியல் இயக்க கிளை எவ்வாறு செயல்படுகிறது**?

குறைந்தது 20 உறுப்பினர்கள் ஒரே பகுதியில் சேர்ந்தால் அவர்கள் ஒரு கிளையாக செயல்படலாம் என்பதனை

ஏற்கனவே பார்த்தோம். அந்த உறுப்பினர்கள் 20 பேரும் கூடி அக்கிளைக்கான தலைவர் , செயலாளர் மற்றும் பொருளாளரை தேர்வு செய்வார்கள்.தேவையின் அடிப்படையில் இணைச்செயலாளர்கள் மற்றும் துணைத்தணைவர்களைத் தேர்வு செய்வார்கள். இந்த நிர்வாகிகளே கிளை யினை தொடர்ந்து அடுத்த மாநாடு வரை செயல்படுத்துவார்கள்.

**கிளைக்கான பொதுவான செயல்பாடுகள்**:

1. மாநிலம் மற்றும் மாவட்டம் நடத்தும் செயல்பாடுகளை கிளை வழியாக செயலாற்றுவது.

   உதாரணம்: தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு,துளிர் வினாடி-வினா துளிர் திறனறிதல் தேர்வு,நமது இந்தியா,தேசிய அறிவியல் தினம் போன்றவைகள்

2. கிளைகள் தங்களுக்கான செயல்பாடுகளைத் திட்டமிட்டு செய்வது

   உதாரணம்: பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்வுகள், கருத்தரங்குகள் , கலைநிகழ்ச்சிகள் போன்றவை. விரிவாக மீண்டும் பார்க்கலாம்.
3. அரசின் நிகழ்வுகளில் தேவையின் அடிப்படையில் இணைந்து மக்களுக்காக செயலாற்றுவது.

   உதாரணம்: அரசின் நல திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வது. தடுப்பூசி நிகழ்வுகளில் , பணம் வாங்காமல் தவறாமல் வாக்காளிக்க வேண்டியதின் ஜனநாயகக் கடமைப்பற்றி விழிப்புணர்வுகள்
4. பொதுவான பிரச்சனையின் மீது அந்தப் பகுதியில் நடைபெறும் செயல்பாடுகளில்.

   உதாரணம்: கல்வி மற்றும் ஆரோக்கியம் ,சுற்று சூழல் தொடர்பாக பிற அமைப்புகளுடன் பொதுவான

இயக்கங்களில் பங்கேற்பது. மாவட்ட மற்றும் மாநில வழிகாட்டுத்தலில் இவைகள் திட்டமிடப்பட வேண்டும்.

மேற்கண்ட நிகழ்வுகளை நிர்வாகிகள் திட்டமிட்டும் கிளையின் ஆதரவுடன் செயல்படுத்துவார்கள். குறிப்பிட்ட செயல்பாட்டிற்கு ஒரு ஒருங்கிணைப்பாளரை நியமித்தும் பொறுப்பளிக்கலாம். கிளையின் அனைத்து உறுப்பினர்களும் ஈடுபடும் வ்கையில் அனைவருக்கும் பணிகள் பிரித்தளிக்கப்பட வேண்டும்.
கிளையின் அனைத்து உறுப்பினர்களின் கூட்டம் மாதம் ஒரு முறை நட்த்தலாம். நடந்தவைகளை பரிசீலிக்கவும் புதியவைகளை திட்டமிடவும் இக்கூட்டம் உதவும்.

4. **அறிவியல் இயக்க கிளைக்கு நோக்கம் உள்ளதா**?

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் நோக்கங்களையே கிளைகளும் தங்களது நோக்கங்களாக ஏற்று நடத்தும்.
**தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் நோக்கங்கள்**:

- ஒரு கவுரமான வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், கல்வி, ஆரோக்கியம் போன்றவை அனைத்துவகை மக்களுக்கும் கிடைத்திட சமூக மாற்றத்தை உருவாக்குவதை ஓர் அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் வெகுவாகக் குறைக்கப்பட்ட ஒரு சமூக அமைப்பை உருவாக்கும் வகையில் செயல்படுவது.
- சாதி, மதம், இனம், பாலினம் என்கிற அடிப்படையில் உருவாக்கப்படும் அனைத்துவகை பாராபட்சங்களையும் எதிர்ப்பது, நீக்குவதற்கு துணை நிற்பது.
- அனைத்து வகை மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் ஜனநாயகத்தை உருவாக்குவது.

- எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியமான வளமான வாழ்க்கையை பாதிக்காத, இயற்கை வளங்களுக்கு தீங்குவிளைவிக்காத நிலைத்தகு வளர்ச்சியை மக்களின் பங்கேற்புடன் படைப்பது.

5. **அறிவியல் இயக்க கிளைக்கு இலக்கு இருக்க வேண்டுமா**?

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தனது நோக்கத்தை நிறவேற்ற பல்வேறு வடிவங்களில் ஏராளமான பணிகளை செய்து வருகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் இயங்கும் கிளை தனக்கான வடிவங்களையும் தனக்கான பணிகளையும் தீர்மானித்து செயலாற்றும். கிளையின் பலத்தின் அடிப்படையில் ஐந்தாண்டுகளில் சாதிக்கவல்லதை இலக்காகக் கொண்டு திட்டமிட்டு செயலாற்றலாம். கிளையின் திசைவழியினையினை தெளிவுபடுத்தவும் முனைப்புடன் முன்னேறிச் செல்லவும் இது துணை நிற்கும்.

6. **அறிவியல் இயக்க கிளைக்கு செயல்திட்டம் என ஏதேனும் தேவையா**?

ஒவ்வொரு கிளையும் ஒராண்டிற்கான ஒரு செயல் திட்டத்தினை உருவாக்கி செயல்படுத்துவது அவசியம். அனைத்து உறுப்பினர்களும் திட்டமிடலில் பங்கேற்க வேண்டும். இதனை கிளை மாநாட்டில் உருவாக்கலாம் அல்லது இதற்கான சிறப்பு பணிமனை நடத்தி உருவாக்கலாம். இந்த பணிமனைக்கு முன் தயாரிப்பாக தங்களது பகுதிகளைப் பற்றிய முழுவிவரங்கள் பெறப்பட வேண்டும். எதில் நாம் தலையீடுசெய்யலாம் என்பதை விவாதித்து முடிவெடுக்கலாம். பெரும்பாலானவைகள் பிரச்சாரங்களாகவும் சில தொடர்செயல்பாடாகவும் அமைவது அவசியம். மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் இந்த செயல்திட்டம் அமுலாக்கம் மீது ஆக்கப் பூர்வமான பரிசீலனை

வேண்டும். மத்திய/மாநில அரசிடம் நிதி உதவிப் பெற்று செயல்படுத்தும் திட்டங்களையும் மாவட்ட/ மாநில அமைப்புகள் மூலம் பெறலாம்.

7. **அறிவியல் இயக்க கிளை தனது உறுப்பினர்களுக்கு என்ன செய்ய வேண்டும்**?

நமது பணி மக்களிடம்தான். சீரிய சிந்தனையும் சிறந்த செயல்திறனும் கொண்ட செயல் வீர்ரகளே திறம்பட மக்களுக்கு பணியாற்ற இயலும். இணையும் அத்தனை உறுப்பினர்களையும் இத்தகைய செயல்வீரர்களாக மாற்றுவதே கிளையின் முதல் கடமை.

- அறிவியல் பார்வை,அறிவியல் சிந்தனை கொண்டவர்களாக மாற வேண்டும். கருத்துவளம் நிறைந்தவர்களாக உருவாக்க வேண்டும். “பொதுப்புத்தி”யினைக் கடந்து சமூக பொருளாதர அரசியல் பின்னணியில் நிகழ்ச்சி போக்குகளைப் புரிந்து கொள்ளும் தலைவர்களாக உருவாக வேண்டும். தொடர்ந்து கற்பதை தனது வாழ்வின் வழிமுறையாக ஏற்க வேண்டும். ஏதேனும் ஒரு துறையில் கருத்தாளராகவும் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும்.
- சமூகத்தின் மீதும் மக்கள் மீதும் அன்பு நிறைந்தவர்களாக இயற்கையினை நேசிப்பவராக, சூழல் காப்பவராக, சமூக நீதிக்கு ஆதரவாலராக, அறிவியல் இயக்க ஆர்வலர்கள் உயர்வது அவசியம். சாதி, மதங்களைக் கடந்து மக்களை ஒற்றுமைபடுத்தும் மாண்புடன் ஜனநாயகத்தை உயர்த்தி பிடிக்கும் உன்னதத் தலைவர்களாக உருவெடுக்க வேண்டும்.
- அனைவரையும் அரவணைத்துச் செல்லும் தலைமைப் பண்பும் அர்பணிப்பு மரபும் அவர்களை

அடையாளப்படுத்த வேண்டும். பேச்சாற்றல், எழுத்தாற்றல் போன்ற நிறைய திறன்களை வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.

- அறிவியல்இயக்கத்தின்அமைப்பு,நோக்கம்,செயல்பாடுகள், வரலாறு மற்றும் அதன் கொள்கை நிலைபாடுகள் பற்றி தொடர்ந்து கற்க வேண்டும்.

- அறிவியல் இயக்கத் தொண்டர்களின் வாழ்வாதாரத்திற்கும் துணை நிற்பதற்கு வழிகாட்டவும் வாய்ப்புள்ள பகுதிகளில் அதற்கான தனியான செயல்திட்டங்களையும் உருவாக்கலாம். மாட்டக் குழு மற்றும் மாநிலக் குழுவின் வழிகாட்டுதலில் இதனைச் செய்யலாம்.

8. **ஒரு கிளைக் கூட்டம் எவ்வாறு நடைபெறும்**?

கிளைக்கூட்டம் மாதம் ஒரு முறை அனைத்து உறுப்பினர்களியும் அழைத்து நடத்தலாம். கூட்டத்திற்கு கிளைத்தலைவர் தலமை வகிப்பார். கூட்டத்திற்கான நிகழ்வுகளை தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் இணைந்து முடிவு செய்ய வேண்டும். இதனை கிளைச் செயலாளர் கூட்ட்த்தில் முன் மொழிவார். கூட்டத்திற்கான முறையான தகவலினை கிளை செயலாளர் முன் கூட்டியே தரவேண்டும்.நிகழ்வுகளை செயலாளர் ஒருங்கிணைப்பார்.

கிளைக் கூட்ட நிகழ்வுகள்:

தலைமையுரை:

வரவேற்புரை:

இரங்கல் தீர்மானம் ( ஏதேனும் இருப்பின்)

நூல் அறிமுகம்/விமரிசனம் அல்லது கருத்துரை – விவாதம்

கடந்த மாதம் நடந்தவைகள்- செயலாளர் அறிக்கை விவாதம்

வரவு செலவு அறிக்கை : பொருளாளர் அறிக்கை- விவாதம் –ஏற்பு
வரும் மாதத்திற்கான செயல் திட்டம்- செயலாளர் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்- விவாதம்
உருப்பினர்கள் கொண்டுவரும் பிற நிகழ்வுகள்
நன்றியுரை;
கூட்ட நிகழ்வுகள்/ முடிவுகள் முறையாக ஒரு தனியான பதிவேட்டில் எழுதி வரவேண்டும். கலந்து கொண்டவர்கள் அதில் கையெழுத்து இட வேண்டும். இந்தப் பதிவேட்டினை கிளைச் செயலாளர் பராமரிப்பார்.
கூட்டம் குறிப்பிட்ட நேரத்தில் துவங்கி குறிப்பிட்ட நேரத்தில் நிறைவுற வேண்டும். பெண்கள் பங்கேற்பை உத்தரவாதப்படுத்த தகுந்த நேரத்தில் நட்த்துவது அவசியம்.விதண்டா வாதங்களைத் தவிர்த்து கூட்டம் கூர்மையாக இனிமையாக அனைவரும் பயனுரும் வகையில் அமைவது அவசியம்.

9. **அறிவியல் இயக்க கிளை செயல்பாட்டிற்கான செலவினங்களுக்கு என்ன செய்யலாம்**?

பல நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற நிதி ஆதாரம் அவசியம். அறிவியல் இயக்கம் ஒரு மக்கள் இயக்கம். மக்களுக்காக செயலாற்றுவதால் மக்களிடமே நிதி உதவிகளையும் எதிர் நோக்குகிறோம்.

செயல்பாடுகளுக்கு ஏற்ப கீழ்கண்ட வழிமுறைகளை நிதி ஆதாரத்திற்கு முயற்சிக்கலாம்.

- ஒரு நிகழ்ச்சிக்கு ஒருவரே/ஒரு நிறுவனமே ஏற்கச் செய்யலாம் (sponsorship).
- நன்கொடை ரசீதின் மூலம் வசூல்
- நிகழ்ச்சிகளுக்கு தேவையான பொருட்களை அன்பளிப்பாகப் பெறுவது.

- கலைநிகழ்ச்சிகளின் போது உண்டியல் வசூல்.
- புத்தக விற்பனை மூலம் முகவர் கழிவுத் தொகை.
- நிகழ்ச்சிகளுக்கு குறைந்தபட்ச நுழைவுக் கட்டணங்கள்.
- மலர் வெளியீடு, விளம்பரத் தொகைகள்.
- கண்காட்சிகள் மூலம்.
- மாநிலம்/மாவட்டம் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் (project).

திரட்டப்படும் நிதி உதவிகள் முறையாக கிளைக் கூட்டங்களில் வைத்து பதிவு செய்ய வேண்டும். ஆடம்பரங்களின்றி எளிமையான முறையில் நிகழ்ச்சிகளுக்கு செலவிடப் பட வேண்டும்.

10. **அறிவியல் இயக்க கிளை தங்கள் பகுதியில் செயல்படும் அமைப்பு/நிறுவனங்களில் என்ன செய்ய விரும்புகிறது**?

ஒரு கிளை தங்களது பகிதியில் செயல்படும் நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பும் கொள்வது அவசியம்.

- ✓ பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்
- ✓ ஊராட்சி அமைப்புகள்
- ✓ சுய உதவிக் குழுக்கள்
- ✓ சுகாதார நிலையங்கள்
- ✓ தொழிற்சாலைகள்

- ✓ மக்கள் திட்டங்களை செயல்படுத்தும் அரசுத் துறைகள்- மகளிர் திட்டம், மாவட்ட தொழில் மையம்,ஒன்றிய/ தாலுக்கா அலுவலகங்கள், ரேஷன் கடைகள்.
- ✓ கூட்டுறவு சங்கங்கள், வங்கிகள்
- ✓ தொழிற்சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள்

இவைப் போன்று பல அமைப்புகளுடன் கிளை தொடர்புடன் செயல்படலாம். எல்லாம் சாத்தியம் படாது ஆனால், சிலவற்றில் நிச்சயம் முடியும். இவைகளில் என்ன செய்ய இயலும் என்பதை நாம் விரிவாகப் பேச வேண்டும்.

11. **அறிவியல் இயக்க கிளை யாருடன் செயலாற்ற விரும்புகிறது**?
மக்களிடம் அறிவியல் இயக்கம் செயலாற்ற விரும்புகிறது என்பது பொதுவன வார்த்தையாகும். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம், இளைஞர்களிடம், பெண்களிடம்,விவசாயிகளிடம், தொழில் முனைவோரிடம் என குறிப்பாக செயலாற்றிவருகிறது. மலை வாழ்மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், சிறுபான்மையினர் என சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான மேம்பாட்டிற்கான சிறப்பு திட்டங்கள் உருவாக்கி செயல்படுத்தலாம்.

12. **ஒரு கிளை செய்யவல்ல செயல்பாடுகள்தான் என்ன**?
தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மேற்கொள்ளும் அனைத்துவகை செயல்பாடுகளையும் மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய கிளை மிக சிறப்பாகச் செய்யலாம்.
அறிவியல் பிரச்சாரம், எழுத்தறிவு இயக்கம், நூலகங்கள், ஆரோகிய இயக்கம், சூழல் காக்க, மண்ணுயிர் இயக்கம்,துளிர் இல்லங்கள், அறிவியல் புத்தகங்கள் விற்பனை இயக்கம், சமம் இயக்கம்,அரசுப் பள்ளியில் மாணவர் சேர்க்கை இயக்கம்,இயற்கை விவசாயம்,சுய உதவிக் குழுக்கள்,ஆய்வுகள் என பலவும் திட்டமிட்டுச் செய்யலாம்

13. **அறிவியல் இயக்கம் பிரச்சாரத்திற்கும் பிற செயல்பாட்டிற்கும் பயன்படுத்தும் யுக்திகள் என்ன**?

அறிவியல் இயக்கம் தனது 32 ஆண்டு செயல்பாட்டில் ஏராளமான வழிமுறைகளை உருவாக்கி பின்பற்றுகிறது.

கீழ்கண்ட வழிமுறைகளை கருவிகளாகக் கொண்டு செயல் படுத்தலாம்:

1. அறிவியல் பாடல்கள், நாடகங்கள்
2. துளிர், விஞ்ஞான சிறகு, அறிவுத் தென்றல், விழுது, ஜந்தர் மந்தர் மாத இதழ்கள் – வாசிப்பு மற்றும் விவாதம்.
3. அறிவியல் வெளியீடுகள் – வாசிப்பு மற்றும் விவாதம்
4. புத்தகங்கள்: வாசிப்பு, அறிமுகம், விமர்சனம், விவாதம்.
5. கருத்தரங்குகள்.
6. விவாத அரங்கங்கள்.
7. தெருமுனைக் கூட்டங்கள்.
8. வீடு தோறும் சென்று பிரச்சாரம்.
9. பிரசுரங்கள்.
10. மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகள்.
11. ஊர்வலம்
12. ஆய்வுகள்
13. வினாடி-வினா நிகழ்ச்சிகள்
14. அறிவியல் முகாம்கள்
15. கணிதத் திருவிழா
16. கணக்கெடுப்பு
17. ஸ்லைடு காட்சிகள்
18. சுவரொட்டி
19. கண்காட்சிகள்
20. CD/Video காட்சிகள்
21. குறும்படங்கள்
22. கல்விச் சுற்றுலா
23. உரையாடல்கள்

24. “தொலை நோக்கி” முகாம்கள்
25. போட்டிகள்/தேர்வுகள்
26. பத்திரிக்கை/தொலைகாட்சி, ஊடகங்களில் செய்தி/பேட்டி.
27. கோஷங்கள்
28. சுவரெழுத்துக்கள்
29. துணி பேனர்கள்.
30. கையெழுத்து பிரதி இதழ்கள்.
31. கருத்துத்தாள்கள்
32. போட்டோ கண்காட்சிகள்
33. ஓவியங்கள்
34. கார்டூன்கள்
35. தகவல் பலகைகள்
36. விஞ்ஞானிகள் சந்திப்பு
37. ஓட்டங்கள்
38. மனிதச் சங்கலி
39. சைகிள் ஊர்வலம்
40. நடை பயணம்
41. பயிற்சிகள்
42. கருத்துரைகள்
43. பரிசோதனைகள்

14. கிராமத்திற்கான சிறப்பு செயல்திட்டம் ஏதேனும் சொல்லலாமே.

## மண்ணுயிர் இயக்கம்

## கிராம செயல்பாட்டிற்கான ஒருங்கிணைந்த செயல்திட்டம்

“**மண்ணுயிர் இயக்கம்**” – நாம் பிறந்த மண்ணின் மாண்புகளை புத்துயிர்ப்பு அளிக்கவும் விளைநிலங்களை உயிர்ப்பிக்கவும் இத்திட்டம் செயல்படும் என்பதால் மண்ணுயிர் இயக்கம் எனப் பெயரிடலாம்.

**மண்ணுயிர் இயக்கத்தின் நோக்கம்**:

- மக்களின் பங்கேற்புடன், அறிவியல் & தொழில் நுட்பத்தின் துணையோடு, சுயசார்பான ,தன்னிறைவு கிராமத்தை உருவாக்குவது.
- நீர்நிலைகள் மற்றும் பிற இயற்கை வளங்களை பாதுகாக்கவும்,விவசாயத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டவும் திட்டங்களை தயாரித்து செயல்படுத்துவது.
- தரமான கல்வி அனைவரும் பெறவும், நோயற்ற ஆரோக்கியமான வாழ்வினை உருவாக்கவும் பெண் சமத்துவதைப் படைக்கவும் துணை நிற்பது.
- கிராமத்திற்கேற்ற வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவது.
- அரசு திட்டங்கள் மக்களுக்கு கிடைக்க உதவுவது.

**அமைப்பு**:

1.**ஊராட்சி ஒருங்கிணைப்புக் குழு**: ஊராட்சி அளவில் திட்டமிடவும், செயல்படுத்தவும் கண்காணிக்கவும் ஒரு ஒருங்கிணைப்புக் குழு அமைக்கலாம். ஊராட்சி ஒருங்கிணைப்பாளர் இக்குழுவினை வழி நடத்துவார். கிராம ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் செயல்பாட்டு ஒருங்கிணைப்பாளர்கள், வார்டு உறுப்பினர்கள்,

ஆர்வமானவர்கள் சிலரையும் இணைக்கலாம். ஊராட்சித் தலைவரையே இக்குழுவிற்கு தலவராக ஏற்கலாம்.

2. கிராம ஒருங்கிணைப்புக்குழு:

கிராமம் அளவிலும் அத்தகைய குழு அமைக்கலாம்.தெரு அல்லது ஒரு பகுதிக்கு ஒரு ஒருங்கிணைப்பாளரையும் யோசிக்கலாம்.

3. செயல்பாட்டுக்குழுக்கள்: மூன்றுவகைக் குழுக்கள் அமைக்கலாம்.

1. கல்வி& கலாச்சாரக்குழு

2.சமம்& ஆரோக்கியம் குழு

3. சுற்றுசூழல் & விவசாயம் குழு

ஒவ்வொரு குழுவிற்கும் செயல்பாடுகள் வரையறை செய்து நடைமுறைப்படுத்தலாம்.தேவையின் அடிப்படையில் கூடுதல் குழுக்கள் அமைக்கலாம்.

1.**கல்வி& கலாச்சாரக் குழு**:

இதனுடைய செயல்பாடாக ........

- பள்ளிகளில் கல்விக்குழுவில் இடம் பெறுவது.குழந்தைகளின் கல்வியின் தரத்தை உயர்த்த பள்ளியுடன் இணைந்தும் தனியாகவும் செய்வது.
- அரசுப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்த இயக்கம் நட்த்துவது
- ஊராட்சியில் நூலகம், கிராமத்திற்கு ஒரு நடமாடும் நூலகம் நடத்துவது
- தகவல் மையம் ஊராட்சி அளவில் நடத்துவது
- கலைக்குழுக்கள்,இசைக்குழுக்கள், விளையாட்டுக்குழுக்கள் உருவாக்குவது

- மாணவர்கள், இளைஞர்களின் திறன் மேம்பாடு & தொழில் பயிற்சி
- துளிர் இல்லங்கள் அமைப்பு

2. **சமம்** & **ஆரோக்கியம்**:
   - சகோதரி மையம், சட்ட ஆலோசனை மையம்
   - சுய உதவிக் குழுக்கள்
   - சுகாதாரத் தொண்டர்கள் பயிற்சி,முதல் உதவிப் பெட்டி பராமரிப்பு
   - முக்கிய தகவல்கள் பதிவேடு பராமரிப்பு( பிறப்பு, இறப்பு,கர்பம்,திருமணம்)
   - மருத்துவ முகாம்கள்,கிராம அறிவியல் திருவிழா
   - வீட்டுத்தோட்டம்
   - அனைவரும் கழிப்பறையினை பயன்படுத்த இயக்கம்

3.**சுற்றுச்சூழல்** & **விவசாயம்**:

- நீர்நிலைகள் கண்காணிப்புக்குழு
- மழைநீர் சேகரிக்க ,மரங்கள் வளர்க்க இயக்கங்கள்
- அரசு திட்டங்கள் மக்களிடம் விழிப்புணர்வு. புதிய திட்டங்கள் உருவாக்க ஊராட்சி அமைப்பிற்கு உதவுவது.
- இயற்கை விவசாயத்திற்கு விழிப்புணர்வு.
- விவசாய மேம்பாட்டிற்கான திட்டம்
- கூட்டுறவு சங்கங்கள் உருவாக்குவது

**சர்வே**:

ஊராட்சி அளவில் சர்வே நடத்தி தற்போதய நிலையினை கண்டறிவது அவசியம்.அதன் அடிப்படையில் அக்கிராமங்களின் தேவைகளுக்கேற்ப செயல் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

**நிதி ஆதாரம்**:

பொதுவாக உள்ளூர் மனித வளங்களைத் தன்னார்வமாகப் பயன்படுத்துவதால் அதிக செலவினங்கள் இல்லை. பிற

செலவினங்களுக்கும் உள்ளூரிலே ஏற்கச்செய்யலாம்
பெரும்பாலும் உள்ளூர் ஆதாரத்துடனே நடத்துவது அவசியம்.
அரசிடம் உதவிப்பெறவும் திட்டமிடலாம்.

15.நகரத்திலும் சில சிறப்பு செயல்பாடுகள் வாய்ப்புள்ளதா?

## **தூய்மை நகரம்**.

*(சூழல் காக்க ஒரு மக்கள் இயக்கம்)*

**முன்னுரை:**

நாளுக்கு நாள் நகரங்கள் விரிவாக்கம் பெற்று வருகின்றன. அலுவலகங்கள், வர்த்தக நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் என பலவும் நகரங்களை மையமிட்டு பல்கி பெருகி வருகின்றன. கிராமங்களில், குறிப்பாக விவசாயத்தில் வேலைவாய்ப்பும் வருமானமும் குறைந்து வரும் நிலையில் மக்கள் நகரங்களை நோக்கி இடம் பெயர்ந்து நடந்தவண்ணம் உள்ளனர். ரியல் எஸ்டேட் மிகப்பெரிய தொழிலாக உருவெடுத்துள்ள நிலையில் அடுக்குமாடி கட்டிடங்கள் கூடிக்கொண்டே செல்கின்றன. ஒரு குடியிருப்புப் பகுதியில் வசிப்போர் எண்ணிக்கை அதிகரிப்பது பல பிரச்சனைக்கு வழிவகுத்து வருகின்றன.

போக்குவரத்து நெரிசலில் நகர வாழ்க்கையே நரக வாழ்க்கையாக மாறி வருகிறது. நகரத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொறு பகுதிக்கு செல்வதில் ஏற்படும் நேர விரயம் பெரும் இழப்பாக உள்ளது.

பரபரப்பான வாழ்க்கையில் நகரம் ஓடிக்கொண்டே இருக்கின்றது. தன்னை சுற்றி நடப்பவைகளைப் பற்றி எந்த கவனிப்பும் இல்லாமல் மக்களும் ஓடிக்கொண்டே இருக்கின்றார்கள்.

மக்களை அணி திரட்டி நிலைத்தகு வளர்ச்சியினை, சூழலை புரிய வைத்து பங்கேற்க வைக்கவும் அரசினை நீண்டகால திட்டத்தினை உருவாக்கி செயல்படுத்த மக்கள் இயக்கம் தேவைப்படுகிறது.

**இயக்கத்தின் பெயர்**:

- ‘தூய்மை நகரம்’ என்ற எளிய பெயரே யோசிக்கலாம்.

**நோக்கம்**:

- நகரத்தின் சூழலை காக்க மக்களை அணி திரட்டுவது.
- நகரத்தில் நிலைத்தகு வளர்ச்சி பற்றிய புரிதலை உருவாக்கி மக்களை வளர்ச்சி திட்டங்களில் பங்கேற்க வைப்பது.
- சூழல் காக்க பிரச்சாரம் / விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தி, மக்களிடையே விவாதத்தினை உருவாக்குவது
- சூழல் மேலாண்மைக்கு புதிய வழிமுறைகளை மக்களின் பங்கேற்ப்புடன் கண்டறிவது.

**செயல்திட்டம்**:

- குடியிருப்பு பகுதிகளில் ‘தூய்மை குழுக்கள்’ உருவாக்கி செயல்பட வைப்பது.
- திடக்கழிவு மேலாண்மை, கழிவு நீர் வெளியேற்றம், கழிப்பிட மேலாண்மையில் கவனம் செலுத்துவது, குறுந்திட்டங்கள் உருவாக்கி, குடியிருப்பு பகுதி அளவில் செயல்படுத்துவது.
- பிளாஸ்டிக்கின் விளைவுகள் பற்றி வலுவான விழிப்புணர்ச்சியினை உருவாக்கி, அதன் பயன்பாட்டினை குறைக்க செய்வது மாற்று வழிமுறைகளை நடைமுறைப்படுத்த செய்வது.
- தற்போதைய போக்குவரத்து வழிமுறைகளின் விளைவுகளை உணர வைத்து மாற்று முறைகளை சிந்திக்க வைத்து செயல்பட வைப்பது, சத்தம் மாசினை குறைக்க வைத்து அமைதி நோக்கி பயணிக்க வைப்பது.

- பாதுகாப்பான குடிநீரை மக்களுக்கு வழங்க வேண்டியது அரசின் கடமை என்பதையும் அதை பெறுவது மக்களின் உரிமை என்பதையும் உணர வைப்பது. அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் சாத்தியமென்பதில் நம்பிக்கை உருவாக்கி மக்களை அதை நோக்கி அணி திரட்டுவது.
- பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் என பொது இடங்களில் தூய்மையினை படைப்பது.
- வீட்டுத் தோட்டம், நகரப் பூங்காக்கள், வீதியோர மரங்கள் - இவைகளில் மக்களின் கவனத்தினை ஈர்ப்பது.
- இன்றைய நகர சூழல் உருவாக்கும் நோய்கள் / அபாயங்கள் பற்றி மக்களை உணர வைப்பது. அதை எதிர் கொள்ளவும், தடுப்பு முறைகளை உருவாக்கவும் மக்களை பங்கேற்க வைப்பது.

**<u>அமைப்பு</u>:**

- அறிவியல் இயக்கம் ஒருங்கிணைக்கும் பணியினை செய்யும்.
- வார்டு அளவில் ஒரு குழு உருவாக்கப்படும் ('தூய்மை குழு') இதில் அந்த பகுதியில் செயலாற்றும் பல்வேறு அமைப்புகளை இணைக்கலாம்.
    - வாலிபர், மாணவர் அமைப்புகள்
    - குடியிருப்போர் நல சங்கம்
    - தன்னார்வ அமைப்புகள்
- ○ நற்பணி மன்றங்கள் என பல அமைப்புகளை இணைக்கலாம். தேர்வில் கவனம் தேவை.
- குடியிருப்பு பகுதியில் 'தூய்மைப்படை' உருவாக்கப்படும். இதில் இணையும் தன்னார்வர்களை 'தூய்மை தூதுவர்கள்' என அழைக்கலாம்.

- தூய்மை தூதுவர்கள்களை கண்டறிவது. குடியுருப்பு பகுதிக்கு 10 பேர். சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களாகவும் தங்களது பகுதி மக்களுக்காக செயலாற்றுபவர்களாக இவர்களை வளர்த்தெடுக்க வேண்டும்.
- முறையான பயிற்சி, திட்டமிட்ட தொடர்ந்த செயல்பாடு இவர்களை வளர்த்தெடுக்க உதவும்.
- மக்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக உருவாக்க வேண்டும்.
- மக்களுக்கான செய்தி இவர்கள் மூலமே சென்றடைய வேண்டும்.

**தமிழ்நாடு அறிவியல் இயக்கம்**

**‘தூய்மை நகரம். – குழு’**

**(ஆர்வலர்கள், அறிவு ஜீவிகள், கருத்தாளர்கள்)**

தூய்மைக்குழு (வார்டு அளவில்)

தூய்மைப்படை(1) தூய்மைப்படை(2) தூய்மைப்படை(3) தூய்மைப்படை(4)

தூய்மை தூதுவர்கள் (தூ.தூ.)

- ஒவ்வொரு குடியிருப்பு பகுதியிலும் 5 – 10 ‘தூ.தூ.’ தேர்வு செய்து பயிற்சி அளித்து, உற்சாகமூட்டி செயல்பட வைப்பது.
- முதலில் பிளாஸ்டிக்கிற்கு எதிரான பிரச்சாரத்தை துவக்கலாம்.

- பரவும் நோய்களைப் பற்றியும் உடன் பிரச்சாரத்தை செய்யலாம்.
- கீழ்கண்ட ஐந்து தலைப்புகளில் கருத்தாக்கங்களை உருவாக்கி, விவாதத்தை மேற்கொள்ளலாம்.
    - திடக்கழிவு மேலாண்மை
    - பாதுகாப்பான குடிநீர்
    - போக்குவரத்து
    - வீட்டுத் தோட்டம் / பூங்கா / மரங்கள்
    - பரவும் நோய்கள்

**<u>நிதி ஆதாரம்</u>**:

- மக்களிடம் நிதி திரட்டுவது
- பெரிய நிறுவனங்களை தத்தெடுக்க செய்வது
- சில ஆய்வுகளுக்கு மாநில / மத்திய அரசுத்துறையிடம் திட்ட நிதியாக பெறுவது.
- பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பிற கல்வி நிறுவனங்களை ஈடுபடுத்தி சில செயல்பாடுகளை செய்வது.

**<u>முதல் நிலை</u>**:

- திட்டமிடல், தயாரிப்பு
- அமைப்புகள் உருவாக்கம்
- விழிப்புணர்வு / பிரச்சாரம்
- பிளாஸ்டிக், பரவும் நோய்கள் பற்றி பிரச்சாரம், விவாதம்
- தனி மனித முயற்சிகள்
- ‘தூ.தூ.’ கண்டறிதல்
- கருத்தாளர்களை கண்டறிதல்

**<u>இரண்டாம் நிலை</u>**

- ‘தூ.தூ.’ பயிற்சி
- கருத்தாளர்கள் உருவாக்கம்
- குடியிருப்பு பகுதிகளில் மக்களின் சேர்ந்த செயல்பாடு

- சர்வே, ஆய்வுகள்
- நிறுவனங்களுடன் தொடர்பு
- திடக்கழிவு மேலாண்மை, பாதுகாப்பான குடிநீர், வீட்டுத் தோட்டம்
- செயல்திட்டம் உருவாக்கம் – பகுதி வாரியாக

**மூன்றாம் நிலை**

- அந்தந்த பகுதிகளில் அமுலாக்கம்
- அரசு செய்ய வேண்டிய திட்டங்கள், கொள்கைகள், சட்டங்கள் தொடர்பாக மக்கள் கோரிக்கை தயாரிப்பு.